# இயேசுவின் மெய்யான சபை

PV. Jesudas

கர்த்தர் உங்களை பெறுக்கமாக ஆசீர்வதிப்பாராக !

ஒரு சமயத்திலே டாக்டர் ஜான் மில்னர் என்பவர் உண்மையான சபை எது என்று நாம் கண்டுபிடித்துவிட்டால் நமக்கு அநேக கேள்விகளுக்கு பதில் கிடைத்துவிடும் என்று எழுதினார். தேவனுடைய உண்மையான திருச்சபை எது என்ற கேள்விக்கு நமக்கு பதில் கிடைத்துவிட்டால், எத்தனையோ விதமான தப்பிதங்களையும் தவறுகளையும் பலவிதமான குழப்பங் களையும் நாம் விட்டு சந்தோஷமாகவும் சமாதானமாகவும் அந்த ஆண்டவரை நாம் வழிப்படலாம்.

### தேவனுக்கு எத்தனை திருச்சபைகள் உண்டு ?

நம்முடைய பொது அறிவின் வாயிலாக நாம் நினைத்துப் பார்த்தால், ஆண்டவர் ஒருவர் இருக்கிறார் என்று நம்புகிறோம். அப்படியானால் அந்த ஆண்டவருக்கு எத்தனை திருச்சபைகள் இருக்கமுடியும்? இன்றைக்கு தேவ பிள்ளைகளின் மத்தியிலே ஏராளமான திருச்சபைகள் இருக்கின்றன. திருச்சபைக்கு இயேசு கிறிஸ்துதான் தலைவர் என்று நாம் படித்திருக்கிறோம்.

**கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும். –எபேசியர் 5:23,24.**

இந்த உலகத்தில் ஏராளமான மார்க்கங்கள் இருக்கின்றன. இன்றைக்கு பிராட்டடஸ்டன்ட் (protestant) மார்க்கத்திலே



860 வித்தியாசமான சபைகள் இருக்கின்றன. கத்தோலிக்க திருச் சபையில் 6 பிரிவுகள் இருக்கின்றன. **அர்மீனியின்** கத்தோலிக் என்ற ஒரு பிரிவு இருக்கிறார்கள். **இந்த் ஆதலாத்** சர்ச்சு என்ற ஒரு பிரிவு இருக்கிறார்கள். **க்ரி ஆதலாத்** சர்ச்சு என்ற ஒரு பிரிவு இருக்கிறார்கள். **ரஷியன் ஆதலாத்** சர்ச்சு என்ற ஒரு பிரிவு இருக்கிறார்கள். **ரோமன் கத்தோலிக்** என்ற ஒரு பிரிவு இருக்கிறார்கள். ரோமன் கத்தோலிக்க சபை ஒன்றுதான் பாப்பு அரசரை தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அந்த ஒரு சபைதான் உலகலாவிய சபையாக இருக்கிறது, உலகலாவிய வேலையும் செய்கிறது.

இந்த கத்தோலிக்க சபைகளின் பிரிவுகளில் சிலர் பாப்பு அரசரை ஏற்றுக்கொள்கிறதில்லை. சில பிரிவுகள் கன்னிமரியம் மைக்கு மதிப்பு மரியாதை வணக்கம் கொடுக்கிறது, ஆனால் பாப்பு அரசரை ஏற்றுக்கொள்கிறதில்லை.

இன்று பென்டிகாஸ்ட் சபை எங்கு பார்த்தாலும் இருக்கிறது. அதிலே 1200 சபைகள் இருக்கின்றன. அதைத்தவிர பெத்தேல் போன்ற தனிப்பட்ட சபைகளும் அவர்களில் இருக் கிறார்கள். இன்றைக்கு கிறிஸ்து தலை என்று நாம் சொல்வோ மானால் அவருக்கு எத்தனை உடம்பை வைக்கிறது ?

ராவனனுக்கு ஒரே உடம்பில் பத்து தலைகள் என்று நாம் கேள்விப்படும்போது அதை நாம் நம்பமுடிகிறதா ? ஆனால் ஒரே தலையான இயேசு கிறிஸ்துவை வைத்துக்கொண்டு அதற்கு இரண்டாயிரம் உடம்பை எப்படி வைக்கமுடியும்?

**அந்நாளில் ஏழு ஸ்திரீகள் ஒரே புருஷனைப் பிடித்து நாங்கள் எங்கள் சொந்த ஆகாரத்தைப் புசித்து, எங்கள் சொந்த வஸ்திரத்தை உடுப்போம்; எங்கள் நிந்தை நீங்கும்படிக்கு உன்பேர்மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டும் என்பார்கள். –ஏசாயா 4: 1.**

திருமறையிலே ஏழு என்று வரும்போது, அது பூரணமான எண் என்று அர்த்தமாகிறது. ஏழு என்று சொல்லும்போது இந்த உலகத்தில் இருக்கிற எல்லா சபைகளையும் குறிக்கிறது. ஆகவே அந்த ஏழு சபைகளும் ஒரே புருஷனான கிறிஸ்துவை பிடித்துக்கொண்டு உம்முடைய பேர் மாத்திரம் எங்களுக்கு விளங்கட்டும் என்கிறார்கள். அதாவது கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் மாத்திரம் எங்களுக்கு இருக்கட்டும் என்று சொல்லு கிறார்கள். பெயர் மாத்திரம் போதும் நடக்கையெல்லாம் எங்களு டைய இஷ்டத்திற்கு விட்டுவிடும் என்று சொல்லுகிறார்கள்

என்று மேலேயுள்ள வசனம் சொல்லுகிறது. இன்றைக்கு கிறிஸ்தவர்கள் என்று பெயரை வைத்துக்கொண்டு அவரவர்கள் தங்கள் சொந்த வழிகளை தேர்ந்தெடுத்துக்கொண்டுபோகிறார்கள்.

**சீர்கெட்டுப்போன குமாரத்தியே, எந்தமட்டும் விலகித் திரிவாய்? கர்த்தர் பூமியிலே ஒரு புதுமையைச் சிருஷ்டிப்பார், ஸ்திரீயானவள் புருஷனைச் சூழ்ந்துகொள்ளுவாள். -எரேமியா 31: 22.**

அதே தீர்க்கதரிசனத்தைதான் இங்கேயும் சொல்லுகிறார். ஒரு புருஷனுக்கு ஏராளமான ஸதிரிகள். எதுவரைக்கும் விலகி திரிவாய்? என்று கேட்கிறார். இன்றைக்கு இந்த வசனம் சொல்லுவதுபோல எவ்வளவு உண்மையாக இருக்கிறது? நான் இந்து மார்க்கத்திலே பிறந்து வளர்ந்து கல்லூரிலே பி.ஏ படித்துக் கொண்டிருந்தபோது என்னுடைய உள்ளத்தில் உண்மையான தெய்வம் யார்? உண்மையான மார்க்கம் எது? என்ற கேள்விகள் எழும்பிற்று. அநேக வருஷகாலமாக அதைபற்றி சிந்தித்தேன். வேதங்களை எடுத்து படித்துப் பார்த்தேன். அதிலே தமிழ் நாட்டிலே சித்தர்களின் பாடல்கள் எனக்கு அதிகமாக பிடித்திருந்தது.

அவர்கள் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று உண்மையை சொல்லுகிறார்கள். சீர்த்திருத்தமான அநேக புத்தகங்களை நான் படித்துப் பார்த்தேன். கடைசியாக நான் கிறிஸ்தவ மார்க்கத்தை அலசி ஆராய்ந்தபோது, நான் ஒரு கிறிஸ்தவனாக ஆகவேண்டும் என்று விரும்பினேன். அந்நேரத்தில் எனக்கு ரொம்ப பிடித்திருந்தது கத்தோலிக்க திருசபைதான்.

நான் இந்து மதத்தில் இருந்தபோது சிலை வணக்கம் செய்ததினால் இந்த கத்தோலிக்க மதத்திலும் அந்த சிலை வணக்கம் இருப்பதால் எனக்கு இந்த மதத்தை பிடித்துவிட்டது. கோயம்புத்திரத்தில் இருக்கும் மைக்கேல் சர்ச்சில் ஒரு அழகான மாதா சிலை இருக்கும், அதற்கு முன்பாக புல் தரையில் முழங்காற்டியிட்டு அதிக நேரம் நான் ஜெபித்ததுண்டு.

என்னுடைய பக்தியைப் பார்த்து அந்த ரோமன் கத்தோலிக்க சபையின் குருமார் என்னை ரோமாபுரிக்கு அனுப்பி அங்கு குரு பட்டத்திற்கு 12 வருஷம் படிக்கவைப்பதற்காக என்னை சிபாரிசு செய்தார். இந்தவிதமான சிபாரிசு சுலபத்தில் யாருக்கும் கொடுக்க மாட்டார்கள். ஆனாலும் என்னுடைய உள்ளத்தில் இந்த கிறிஸ்தவ மார்க்கத்திலே ஏன் இவ்வளவு பிரிவுகள் என்று பெரும் குழப்பமே இருந்தது. வேத புத்தகத்தை எடுத்து நான் அதிகமாக படிக்க ஆரம்பித்தேன்.



கிறிஸ்தவ மார்க்கத்திலே நான் மாறினதற்காக என் வீட்டிலே எனக்கு இடம் கிடைக்காமல் போய்விட்டது. என்னை வீட்டை விட்டே வெளியே அனுப்பிவிட்டார்கள். பாரம்பரிய இந்துவாக இருந்த நான் கிறிஸ்தவனாக மாறினதற்கு எனக்கு என் வீட்டிலேயே இடம் இல்லாமற்போய்விட்டது.

எனக்கு இருந்த ஆறுதலெல்லாம் அந்த கத்தோலிக்க சபையின் குருமார்தான். அவர் பெயர் சகரியா, அவர்தான் எனக்கு ஆறுதலையும், வேத வசனத்திலும் பெரும் உதவியும் செய்தார். நான் அதிகமாக அவரிடத்தில் வேத வசனத்தில் எனக்கு புரியாத வசனங்களையெல்லாம் அவரிடம் கேட்டுக் கொண்டிருப்பேன்.

கடைசியில் அந்த பாதிரியார் என்னை நோக்கி தம்பி: இந்த வேத வாக்கியங்களுக்கு பதில் கிடைக்கவேண்டுமென்றால் பிராட்டஸ்டன்ட் மார்க்கத்திற்குதான் போய்கேட்கவேண்டும் என்று சொல்லிவிட்டார்.

பிறகு பிராட்டஸ்டன்ட் மார்க்கத்திற்கு மாறினேன், அங்கு எனக்கு பெந்தகோஸ்தே சபையை பிடித்திருந்தது. அவர்கள் பாடுகிற பாட்டு, உற்சாகமாக செய்கிற ஜெபங்கள் யாவும் என்னை ரொம்பவும் இழுத்தது. அந்த சபைக்கு நான் அடிக்கடி போய்க் கொண்டிருந்தேன்.

ஆகவே இந்த ஏராளமான பெந்தகோஸ்தே சபையில் ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றேன் என்று சொல்லும்போது சபைகள் பிரிந்திருக்குமா அல்லது ஒரே சபையாக இருக்குமா? ஆவியானவர் ஒரு சபையை ஆயிரமடங்காக பிரித்திருப்பாரா? எது உண்மையான சபை? எந்த சபை கர்த்தர் சொல்லுவதை சரியாக செய்கிறது? நாம் எப்போதாகிலும் சிந்தித் திருப்போமா? எல்லோரும் பரலோகத்திற்கு போகவேண்டும் என்ற ஆசை இருக்கிறது. ஆனால் மார்க்க பிரிவுகளினால் நாம் எந்த சபை பரலோகத்திற்கு போக ஆயத்தப்படுத்துகிறது என்று சிந்திக்க வேண்டாமா? இன்று சபைக்குசபை குறை கூறிக்கொண்டேயிருக்கிறது அல்லவா? நாம் எதை பின்பற்றுவது?

**எந்த சபை நம்மை பரலோகத்திற்கு அழைத்துச்செல்ல வழிகாட்டுகிறது ?**

**உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு; ஒரே**

**கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லா ருக்குள்ளும் இருக்கிறவர்.** -எபேசியர் 4:4,5,6.

ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், என்று எல்லாமே ஒன்றே ஒன்று என்ற கொள்கைகளை குறித்து இங்கு சொல்லப்படுகிறது. திருச்சபையை குறித்து ஆண்டவர் ஒரு மனவாட்டிக்கு ஒப்பிட்டு பேசுகிறார். கிறிஸ்துவை ஒரு கணவன் என்றும், சபையை ஒரு மணைவி என்றும் ஆண்டவர் ஒப்பிட்டு பேசுகிறார்.

**கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.** -எபேசியர் 5:23,24.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஒரே மணைவியாகிய ஒரே சபைதான்.

**அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்ளுகிறேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.**
-யோவான் 17:21,23.

ஆகவே நாம் ஒன்றாயிருக்கவேண்டும். ஆயிரம் சபைகளை வைத்துக்கொண்டு எப்படி ஒன்றாயிருக்கமுடியும்? அங்கே நடுவில் நமக்கு அதிக கருத்து வேறுபாடுகள் இருக்கிறது. பிரிவினை என்பது கிறிஸ்தவ மார்க்கத்திலே இருக்கக்கூடாது. இதற்காகதான் அன்று ஆண்டவர் அப்படி ஜெபம் செய்தார். அந்த ஜெபம் அப்போஸ்தலர்களுக்கு மட்டும் செய்யவில்லை நமக்கும் சேர்த்து தான் செய்தார்.நாமோ அதை அசட்டைபண்ணி இன்று ஏராளமான பிரிவுகளை உண்டாக்கிக்கொண்டோம்.

ஒரு ஊருக்கு போய்சேர வேண்டுமென்றால் நடுவில் பல வழிகள் பிரிந்து கிடக்கும். எந்த வழிகள் சரியான பாதையில் கொண்டுபோகும் என்று அறிந்து தேடிக்கண்டுபிடித்தால்தான் நாம் அந்த ஊருக்கு போய் சேரமுடியும். தேடிகண்டுபிடிக்க எத்தனை பேரிடம் நாம் கேள்விகள் கேட்கிறோம்? ஆனால் ஆண்டவரிடம் அழைத்துச் செல்லும் வழியான மெய்யான சபை எது என்று நாம் கேட்கிறோமா?



நோவாவை காப்பாற்றினது ஒரே பேழைதான். உலகம் ஜலத்தினால் அழியபோகிறது என்று கர்த்தர் சொன்னபோது அந்த அழிவுக்கு தப்பித்துக்கொள்ள ஒரு பேழையைதான் உண்டுப்பண்ணினார் அதனால் தப்பித்துக்கொண்டார். அப்படியே திரும்பவும் இந்த உலகம் அக்கினியினால் அழிக்கப்படபோகிறது என்று தப்பித்துக் கொள்ள பல பேழையான பல சபைகள் வேண்டுவதில்லை. அப்படி பல பேழைகளை எடுத்து சென்றோமென்றால் நாம் போய் சேர வேண்டிய இடத்திற்கு சேரமுடியாது.

இன்றைக்கு அற்புதங்கள், அடையாளங்கள், சுகமளிக்கும் வரங்கள், அந்நியபாஷை என்று பலவிதமான சபைகள் இந்த உலகத்தில் பெறுக்கெடுத்து ஓடுகிறது. இதற்குதான் முக்கியத் துவம் கொடுக்கிறார்களே தவிர பரலோகத்திற்கு போகும்வழி என்ன? அதற்கு வேண்டியது என்ன? என்று ஆராய்ந்துப்பார்க்க வில்லை

**அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்.** -மத்தேயு 7:22,23.

கடைசிக்காலத்திலே அநேக சபைகள் உம்முடைய நாமத் தினாலே அநேக காரியங்களை செய்தோம் என்று சொல்லும்போது கர்த்தர் உங்களை அறியேன் என்று சொல்லிவிடுவார். இன்றைக்கு நியாயத்தீர்ப்பை குறித்து அதிகமாக பேசவேண்டியது நம் கடமை யல்லவா? சபைகளில் அதை முக்கியப்படுத்தி பேசுகிறார்களா? நியாயத்தீர்ப்பு நாளிலே நாம் பரிசுத்தவான்களாக ஆண்டவருக்கு முன்பாக நிற்கவேண்டுமென்பது ஆண்டவருடைய கட்டளை யல்லவா? அதைபற்றி போதிக்கிறார்களா?

**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. -மத்தேயு 7:21.**

ஆண்டவர் எவ்வளவு உறுதியாய் சொல்லிவிட்டார். பிதா வினுடைய சித்தம் அவரின் கற்பனைகளையும் வசனங்களையும் கைக்கொள்ளுகிறதல்லவா? அதை கடைப்பிடிக்கிறவர்கள் மட்டுமே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். பத்து கற்பனையின்படி நீ நடந்தாயா?

என்றுதான் அன்று ஆண்டவர் கேட்பார்.
ஆகவே விசுவாசம் ஒன்று,தேவன் ஒன்று, சபை ஒன்றுதான்.
**தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது.** -1 தீமோ. 3:15.

### இங்கு சத்தியம் என்றால் என்ன?

**சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்** -ஏசாயா 26:2.
சத்தியத்தை கைகொண்டு வருகிற ஜாதிதான் பரலோகத்திலே பிரவேசிப்பார்கள்.
**அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.** -யோவான் 18:37.
கர்த்தர் இங்கு சத்தியத்தை முக்கியப்படுத்துகிறார். ஆகவே சத்தியத்தினாலே நாம் பரிசுத்தமாகிறோம் என்று வேதம் சொல்லு கிறது. எந்த சபை, வசனத்தை சரியாக சொல்லுகிறதோ அதுவே இயேசுவின் மெய்யான சபையாக இருக்கும். அவருடைய கற்பனைகளையும் வசனங்களையும் சரியாக எடுத்துறைக்கும் சபையே இயேசுவின் உண்மையான சபை. வசனத்திற்கு புறம்பாக பேசும் சபைகளில் உண்மையான சத்தியம் இருக்காது. ஆண்டவருக்கும் அது பிரியமாயுமிருக்காது.
**ஆகையால் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தைக் கேளாமலும், புத்தியை ஏற்றுக்கொள்ளமலும் இருக்கிற, ஜாதி இதுதான் என்றும், சத்தியம் அழிந்து, அது அவர்கள் வாயிலிருந்து அற்றுப்போனதென்றும் அவர்களுக்குச் சொல்.** -எரேமியா 7:28.
**சத்தியம் தள்ளுபடியாயிற்று; பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான்; இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனமுள்ளவரானார். ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணிப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்; ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது.** -ஏசாயா 59:15, 16.
சத்தியத்தை பற்றி கவலைப்படாமல் தன் போக்கிலே போகிறார்கள்.
திருமறை கடைசிக்காலதிருசபையைப்பற்றி என்ன சொல்லுகிறது?



ஆண்டவர் இந்த ஆயிரக்கணக்கான திருசபைகளில் தன்னு டைய சபை எது என்று வேதத்தில் விளக்கம் கொடுக்கிறார்.
**அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன.** -வெளி. 12.1
இங்கு ஸ்திரி என்றால் சபையை குறிக்கிறது. சூரியன் என்றால் இயேசுகிறிஸ்துவை குறிக்கிறது அதாவது அவரே நீதியன் சூரியன் என்று சொல்லப்படுகிறது. அடுத்து சூரியனுடைய வெளிச்சத்தை சந்திரன் பிரதிப்பலிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வருவார் என்று பலிகள், சடங்காச்சாரங்கள், ஆலயங்கள், தீர்க்கதரிசனங்கள் யாவும் இயேசு கிறிஸ்து ஆட்டுகுட்டியாக வந்து மரிப்பார் என்று சந்திரனுக்கு ஒப்பிட்டு பேசப்படுகிறது.
அடுத்து பன்னிரண்டு நட்சத்திரம் என்றால் பன்னிரண்டு சீஷர்களுக்கு ஒப்பிட்டுப்பேசப்படுகிறது.
**அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவவேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.** -வெளி. 12:2.
அந்த ஸ்திரியான திருசபை கர்ப்பவதியாயிருந்து பிரசவவேதனை யடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினது.
**அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது; ஏழு தலைகளையும், பத்துக்கொம்புகளையும், தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.** -வெளி 12:3.
சிவப்பான வலுசர்ப்பம் என்றால் தேவனுடைய பிள்ளைகளின் இரத்தத்தை குடிக்கின்ற பிசாசை குறிக்கிறது.
**அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை இழுத்து, அவைகளைப் பூமியில் விழத்தள்ளிற்று; பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.** -வெளி. 12:4.
அந்த பிள்ளையாகிய இயேசுகிறிஸ்துவை கொன்றுபோட சாத்தான் ஏரோதை தீண்டிவிட்டான்.
**சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும் ஆண்பிள்ளையை பெற்றாள்; அவளுடைய பிள்ளை தேவனிடத் திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும், எடுத்துக்கொள்ளப்பட்டது.** -வெளி. 12:5.
பிறகு ஆண்டவர் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டபிறகு அவருடைய திருசபை வனாந்திரத்திற்கு ஓடி போனது.
**ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே ஆயிரத்திருநூ ற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக**

**தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.**
-வெளி . 12: 6.

வனாந்திரம் என்றால் ஜனங்கள் இல்லாத இடம். திருச்சபை அந்த வனாந்திரத்திற்கு ஓடிபோனபோது என்றால், அன்றிருந்த அஞ்ஞான அரசர்கள் (ரோம சாம்ராஜியம்) கிறிஸ்தவர்களை துன்புறுத்தி 5 லட்ச பேர்களை கொன்று குவித்தது.அந்த பயங்கரமான நாட்களில் தேவஜனங்கள் காடுகளுக்கும் வனாந்திரத்திற்கும் (ஆல்பஸ் என்ற மலைகளின் மூன்றாவது அடுக்கு தாண்டி மலையின் நடுவில் ) ஓடிபோனார்கள். ஆகவே வசனம் சொல்வதுபோல இந்த திருசபை 1260 நாட்கள் வனாந்திரத்திற்கு ஓடிபோனது என்று வேதம் சொல்லுகிறது.1260 நாட்கள் என்றால் தீர்க்கதரிசனம் பிரகாரம் 1260 வருடங்கள் என்று கணக்காகிறது.

நீ இவைகளை நிறைவேற்றினபின்பு, மறுபடியும் உன் வலதுபக்கமாய் ஒருக்களித்து, யூதா வம்சத்தாரின் அக்கிரமத்தை நாற்பதுநாள் வரைக்கும் சுமக்கவேண்டும்; ***ஒவ்வொரு வருஷத்துக்குப்பதிலாக ஒவ் வொரு நாளை*** உனக்குக் கட்டளையிட்டேன். எசேக்கியேல் 4.6 நீங்கள் தேசத்தை சுற்றிப்பார்த்த நாற்பதுநாள் இலக்கத்தின்படியே, ***ஒவ்வொரு நாள் ஒவ் வொரு வருஷமாக,*** நீங்கள் நாற்பது வருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, என் உடன்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள். எண்ணாகமம் 14.34 **சரியாக கணக்கு பார்த்தால் அது**



1798 -ல் முடிகிறது. அந்த வருடம் முடிந்தபிற்பாடு, அந்த ஓடிபோன திருசபை திரும்ப விட்ட இடத்திற்கு வருகிறது. ஆகவே இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்பு வரையிலும் சாத்தான் நாம் செய்யும் குற்றங்களை தேவனிடம் குற்றமஞ்சுமத்தி **வந்தான் என்று வேதத்தில் சொல்லப் படுகிறது.** அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப் பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது; இரவும் பகலும் நம்முடைய தேவனுக்குமுன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான். வெளி. 12. 10 **ஆனாலும் இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன்பாக** அவர்களை அவர் நோக்கி: சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன். லூாக்கா 10. 18 **அப்படியானால் சாத்தான் மற்ற உலகங்களுக்கு போகாதபடி அவர்கள் தீர்ப்பளித்து அவனை தள்ளிவிட்டார்கள். ஆகவே அவன் இனி மற்ற உலகங்களுக்கு போக வழியில்லாமற்போய் விட்டது. அதனால் அவன் தன் எல்லாவிதமான வல்லமை களையும் ஆலோசனைகளையும் இந்த உலகத்தை அழிப் பதிலே உபயோகப்படுத்தி வருகிறான். தனக்கு இன்னும் கொஞ்சம்காலம்தான் இருக்கிறது என்று தெரிந்துகொண்டு தன்னுடைய வல்லமைகளை தேவனுடைய பிள்ளைகளின்மேல் கோபமாய் காட்டிவருகிறான்.** வலுசர்ப்பமானது தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீயைத் துன்பப் படுத்தினது. வெளி 12. 13 **இப்படி சாத்தான் துன்பப்படுத்தி வாதைகளை நம் மீது கொட்டிகொண்டிருந்த வேளையிலே தேவனுடைய பிள்ளைகள் அன்று ஜனங்களே இல்லாத இடமாக இருந்த அமெரிக்கநாட்டிற்கு ஓடிபோனார்கள் என்று சரித்திரத்திலே**

படிக்கிறோம். அப்பொழுது அந்த ஸ்திரீயை வெள்ளங் கொண்டுபோகும்படிக்குப் பாம்பானது தன் வாயிலிருந்து ஒரு நதிபோன்ற வெள்ளத்தை அவளுக்குப் பின்னாக ஊற்றிவிட்டது. பூமியானது ஸ்திரீக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பம் தன் வாயிலிருந்து ஊற்றின வெள்ளத்தை விழுங்கினது வெளி 12. 15, 16 இப்படி இவர்கள் தப்பித்து ஓடினபோது சாத்தான் மிகுந்த கோபம் கொண்டு அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப்போயிற்று. வெளி 12. 17 இங்கு ஸ்திரியுடைய சந்ததி என்று பார்க்கிறோம். சந்ததி என்றால் சபையினுடைய கடைசிப்பாகம் (மீந்துபோன சபையை குறிக்கிறது.) ஆகவே அந்த ஆதியிலிருந்த அந்த திருசபை என்ன செய்கிறது என்று பார்க்கபோனால் சீனாய்மலையில் தன்னுடனே பேசின தாம் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும்,



நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே. அப்போஸ்தலர் 7. 38 அப்படியானால் வனாந்திரத்திலிருந்த சபை. ஆகவே சபை பெந்தகோஸ்த்திலிருந்து தோன்றினது என்று பலர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்த வனாந்திர

சபை இஸ்ரவேலர்களிடத்திலிருந்து தோன்றினது. அந்த நாளிலிருந்து சபைசரித்திரம் வந்துகொண்டேயிருக்கிறது. முதலில் அது யூத சபையாக இருந்தது, பிறகு அது கிறிஸ்தவ சபையாக மாறினது. பிறகு அப்போஸ்தலரின் சபையாகவும் வந்தது. ஆதிக்காலத்தில் ஆண்டவர் வெளிப்படுத்தின விசேஷத்தில் மூன்றாம் அதிகாரத் திலே ஏழு சபைகளை குறித்து பேசுகிறார். சிலர் அது ஏழாக பிரிந்திருந்தது என்று நினைக்கிறார்கள். அதெப்படியெனில் முதலாம் நூற்றாண்டிலிருந்த சபைக்கு எபேசு என்று பெயர். இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டிலிருந்த சபைக்கு சிமிர்னா என்று பெயர். நான்காம் ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டிலிருந்த சபைக்கு பெர்கமு என்று பெயர். இப்படியாக இந்த ஏழு சபைகளும் காலத்தை குறித்து பேசுகிறதே தவிர ஏழு வித்தியாசமான சபைகளை குறித்து இங்கு பேசப்படவில்லை. எல்லாமே ஒரே சபைதான். ஆனால் அந்த சபையின் சரித்திரம் எந்த காலத் திலிருந்தது என்று குறிக்கிறது. கடைசிக்காலத்திலே அதாவது இப்பொழுதிருக்கிற சபைக்கு லவோதிக்கேயா சபை என்று சொல்லப்படுகிறது. இப்பொழுதிருக்கிற ஏராளமான திருசபை களிருக்கிறது. ஆனால் அந்த வனாந்திரத்தில் தொடங்கின மீதமான கர்த்தருடைய திருசபையை குறித்து ஆண்டவர் என்ன சொல்லுகிறார் ? அந்த திருசபைக்கு ஆண்டவர் இரண்டு விசேஷமான அடையாளங்களை கொடுத்திருக்கிறார். அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, 1.*தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும்,* 2. *இயேசுகிறிஸ்துவைக் குறித்துச்*

*சாட்சியை உடையவர்களாகிய* அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று. வெளி. 12. 17 ஆகவே இந்த 1260 வருடங்கள் கழிந்த வுடனே, வெளிப்படுத்தின விசேஷத்தில் 14 ம் அதகாரத்திலே சொல்லப்படும் மூன்று தூதுகளும் உலகம் முழவதிலும் போக ஆரம்பித்தன. அந்த மூன்று தூதுகளை விசுவாசிக்கும் பிள்ளைகள் இயேசுவின் கற்பனைகளை கைக்கொள்ளுகிறார்கள். முதலாம் தூதன் நியாத்தீர்ப்பு வந்தது ஆகவே வானத்தையும் பூமியையும் படைத்த ஆண்டவரை தொழுதுக்கொள்ளுங்கள் என்று சொன்னான். இரண்டாம் தூதன் பாபிலோன் மகாநகரம் விழுந்தது விழந்தது என்று சொன்னான் (தப்பிதமான உதேசங்கள் வேதத்திலே சொல்லாத காரியங்களை குறித்துபேசும் உபதேசங்கள் விழுந்தது.) அதை பின்பற்றாதீர்கள் என்று இரண்டாம் தூது சொல்லுகிறது. மூன்றாம் தூது மிருகத்தின் முத்திரையின் தூது. அந்த முத்திரையை தரித்துக்கொள்ளுகிறவர்களுக்கும் அதை வணங்குகிறவர்களுக்கும் ஏராளமான தேவனுடைய கலப்பில்லாத வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமான மதுவை குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும்



அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவார்கள். ஆகவே மிருகத்தின் முத்திரையாகிய அந்த ஞாயிறு ஆசரிப் பை கடைப்பிடிக்ககூடாது என்று வேதம் சொல்லுகிறது. இன்றைக்கு ஒரு சபை இருக்கிறது அந்த திருசபையை குறித்து வேதம் நான்கு காரியத்தில் அடையாளம் காட்டுகிறது. முதலாவது இந்த திருசபை 1798 ஆண்டிற்கு பிற்பாடு தோன்றும். இதை குறித்து முன்னான பக்கங்களிலே சற்று விளக்கமாக பார்த்தோம். இரண்டாவது இந்த திருசபை மூன்று தூதுகளை உலகமெங்கும் பிரசங்கம்பண்ணும். அந்த மூன்று தூதுகள் நித்திய சுவிசேஷகம் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது. அது எச்சரிப்பை நமக்கு நோவா காலத்தில் தோன்றினதுபோல கொடுக்கும். மூன்றாவது இந்த திருசபை தேவனுடைய கற்பனைகளை கைகொள்ளும். இன்றைக்கும் கற்பனைகளை முழவதுமாக கைக்கொள்ளாமல் போகும் சபைகள் பெறும் பகுதியாக இருக்கிறது. ஆதியிலிருந்து கற்பனைகளை முழவதுமாக கைக்கொள்ளும் சபையே கர்த்தருடைய சபையாக இருக்குமே தவிர தேவன் சொல் லாததை தாங்களே மாற்றிக்கொண்டு இதுதான் சரி என்று சொல்லும் சபைகள் போலி சபைகள்தான் என்று திட்டவட்ட மாக தெரிகிறது. பத்துகற்பனைகளை கைக்கொள்வதே ஆண்டவருடைய கட்டளை. இதில் ஒன்றைகூட தவிரகூடாது என்பது ஆண்டவருடைய கட்டளை. இப்படியிருக்க நான்காம் கற்பனையை ஆண்டவர் சிலுவையில் அறைந்துவிட்டார் என்று ஆண்டவர் சொல்லாததை நாமே சொல்லும்போது அவருக்கு விரோதமானதா அல்லது இல்லையா ? என்று நாம் நம்மை கேள்விகேட்கவேண்டும். பல சபைகளில் ஓய்வுநாளே கிடையாது என்று மறுதலிக்கிறார்கள். அதை பகிரங்கமாகவே கூறிவிடுகிறார்கள். ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனை களின்படிசெய்கிறவர்கள் பாக்கியவான்கள். வெளி


22. 14 அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் என்றால் நான்காம் கற்பனையை தவிர என்று அர்த்தமா? இந்த பத்து கற்பனை களை கடைப்பிடிக்கிற கொள்கைகளுடையவர்கள்தான் அந்த *ஏழாம் நாள் அட்வெந்து திருச்சபை* ***(seventh day adventist church)*** மட்டுமே. அவர்கள் இயேசு கிறிஸ்துவை குறித்த சாட்சியுடையவர்களாக இருக்கிறார்கள். அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக் குறித்துச் சாட்சியிட்ட சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். ***இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது*** என்றான். வெளி 19. 10 இயேசு கிறிஸ்துவின் சாட்சி என்ன? அது தீர்க்கதரிசனத்தின் ஆவியுடையவர்க ளே. இன்றைக்கு ஒரே ஒரு திருசபைதான் தீர்க்கதரிசனத்தை



வழக்கமாகவும் திட்டவட்டமாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறது. சில சமயங்களிலே மற்ற திருசபைகளும் சொல்லலாம், ஆனால் அந்த திருசபையின் தீர்க்கதரினத்திலே ஒன்றுகொன்று முரன் பாடாக இருக்கும். ஒரு சில பகுதிகளைதான் அவர்கள் சொல்லுவார்கள். தீர்க்கதரிசனத்தை திட்டவட்டமாக சரியாக சொல்லவேண்டும். வேதத்திலே அதற்கொத்த மற்ற வசனங் களையும் எடுத்துக்காட்டவேண்டும். *ஏழாம் நாள் அட்வெந்து திருச்சபை*க்கு ஆண்டவர் அந்த தீர்க்கதரிசன வரத்தை கொடுத்திருக்கிறார். அதுவே வேதத்திலுள்ள பல இரகசியங்களை வெளிப்படுத்துகிறது. ஆகவே இந்த திருசபை 1844 -ல் தோன்றினது. அந்த திருசபை மூன்று தூதுகளை உலகமெங்கும் சொல்லுகிறது. மற்ற எந்த திருசபையும் இந்த மூன்று தூதுகளை சொல்வதுகிடையாது. இப்பொழுது ஞாயிறு ஆசரிப்பு சட்டம் மிக மிக சீக்கிரத்திலே வரபோகிறது. அந்த சட்டத்தை அமெரிக்கா தான் கொண்டுவர இருக்கிறது. அதை ஆசரிக்காதவர்களுக்கு தூக்கு தண்டனைகூட விதிக்கப்படும். எப்படிப்பட்ட தண்டனைகள் வந்தாலும் சரி, ஆண்டவருடைய கற்பனைகளை முழவதுமாக கைகொள்ளுவதே இந்த *ஏழாம் நாள் அட்வெந்து திருச்சபை*யின் கொள்கைகள். இயேசு கிறிஸ்துவின் சிலுவையின் பாடுகள் யாவும் நம்மை அவரிடம் கொண்டுசெல்வதற்கே ஆனது. இந்த திருசபை கற்பனைகளை முழவதுமாக கைக்கொள்ளும் கொள்கையுடையதா என்று நாம் அறிந்து , இது தேவனுடைய சித்தம்தானே என்று முழவதுமாக அறிந்துகொண்டு நாம் வேறுபக்கம் திசை திரும்பாமல் ஆண்டவரிடத்தில் எந்த திருசபை உம்மண்டை அழைத்து வரும் என்று ஒவ்வொரு தேவபிள்ளைகளும் ஆண்ட வரிடத்தில் கேட்கவேண்டும். அவர் நிச்சயமாக பதிலளிப்பார். நித்திய ஜீவனடைய இன்றே நாம் தேவ வழியில் புறப்பட்டு செல்வோம். ஆமென்.




*சில ஆதாரங்கள் !*



<u>கபாலஸ்தலம்</u> என்று அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு அவர்கள் வந்தபோது, - மத்தேயு 27.33



கப்பர்நகூமிலுள்ள <u>ஜெபஆலயத்திலே</u> அவர் உபதேசிக்கையில் இவைகளைச் சொன்னார். யோவான் 6. 59